Kavignan

# கவி ஞன்

முற்றுமுழுதான மாதாந்தக் கவிதைச் சஞ்சிகை

**இனி நீங்களும் விளையாடலாம் மொழியோடு**



**இதழ்-007 புரட்டாதித் திங்கள் 2010**

விலை ரூபா-20.00

# Kavignan கவி ஞன்

கவிஞன் வாசகர்களுக்கு வணக்கம்,

இதுவரை நீங்கள் வழங்கிய ஆதரவுக்கு எனது அன்புகலந்த நன்றிகள். இதே ஆதரவு தொடர்ந்தும் உங்களிடமிருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் மீண்டும் ஒரு கவிஞன் இப்போது உங்கள் கரங்களில்.

ஒவ்வொரு மனிதனுள்ளும் ஒரு கவிஞன் ஒளிந்து கிடக்கின்றான்.
உள்ளத்து உணர்வுகள் தூரிகை வழியாக காகிதம் உரசுகையில் வண்ண ஓவியம் பிறக்கிறது. சொற்களை விஞ்சி ஒரு கற்பனை மூலமாய் கல் மறைந்து ஒரு கற்சிலையாகிறது. கறைகள் படிந்த காதைகள் கூட கவிஞரால் காவியமாகிறது. இந்த கவிஞனும் உங்கள் கவிதைகள் சுமப்பதால் காத்திரமாகிறது...

எனவே வாழும் சூழலில் ஆளும் விடயங்களை நாளும் எழுதுங்கள்! கவிஞனுக்கு

மற்றும் நீங்கள் சந்தாதாரராகுவதன் மூலம் கவிஞனின் வளர்ச்சிக்கும் உதவலாம். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துவதன் மூலமாய் அவர்களது ஆற்றலையும் வெளிப்படுத்தலாம். கவிதை ஆர்வமுள்ள உங்கள் நண்பர்களின் முகவரிகளை எமக்கு அனுப்பிவைக்குமிடத்து உங்கள் முகவரியிலிருந்த அந்நண்பருக்கும் கவிஞன் இதழொன்று இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
அனுப்பவேண்டிய முகவரி:

"கவிஞன்"
கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(கீ.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.

'KAVIGNAN"
Co-op Road,
Puthukkudiyiruppu - 5 (E.P),
Batticaloa,
Sri Lanka.

மின்னஞ்சல்: kavignan@live.com

**வருடச் சந்தா ரூபா.300.00**

சந்தா தொகையினைக் காசுக்கட்டளை மூலமாக அனுப்பமுடியும்.
அனுப்பவேண்டிய தபாலகம் : புதுக்குடியிருப்பு
முகவரி : ச.மதன், கூட்டுறவுக் கடைவீதி,
புதுக்குடியிருப்பு(கீ.மா),மட்டக்களப்பு.

அன்புடன்
ஆசிரியர்

Kavignan
# கவி ஞன்

தோற்றம்: 27. பங்குனி. 2010

07

22 புரட்டாதி 2010

ஆசிரியர் :சதாசிவம் மதன்
தொ.பே :0094 773620328
முகவரி :கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு–5(கீ.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.
மின்னஞ்சல்: kavignan@live.com

## உள்ளே....

அறிமுகப் புதுமுகம்................ 03
இம்மாதப் பிரபலம்................ 04
இலக்கணக் கவிஞன்........... 06
கவிதைத்துளிகள்................ 07
கவிதைச் சமர்.................... 08
மாதம் ஒரு கீதம்................... 09
பாண்டிருப்பு திரௌபதையே தாயே..... 10
தொலைதூரப்பயணம்,ஆனந்தம். 11
உனது தூசிப்பும் எனது நேசிப்பும்...... 12
ஆதியனாகிவிடு.................... 13
அட்டைப்படக் கவிதை............. 14
அகத்தில் அமர்ந்தவை ........... 15
மேசைக்கிறுக்கல் .................. 16
நிறைமகள் ........................ 17
வாசகரிடமிருந்து கவிஞனுக்கு..... 18

## சிந்தனைக்கு...

இம்மாதம் உங்கள் சிந்தனைக்காக ஈழத்து மகாகவி எனப்போற்றப்படும் மகாகவி.து.உருத்திரமூர்த்தி அவர்கள் கவிதையின் கருப்பொருள் பற்றிப் பாடிய கவிவரிகள் சில...

" மின்னல், முகில் தென்றலினை
மறவுங்கள் மீதிருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்....."

# அறிமுகப் புதுமுகம்



***முழுப்பெயர்*** : தர்மகீர்த்தி தனுஷன். (தயாளன்)

***முகவரி*** : 12ம் குறுக்கு,
திருப்பெருந்துறை,
மட்டக்களப்பு.

***வயது*** : 25 வருடங்கள்

***கல்வி கற்ற பாடசாலை:***
மட/புனித மிக்கேல் கல்லூரி.

***எழுத முயல்வது*** : காதல் கவிதைகள்
***படிக்க விரும்புவது*** : காதல் தவிரத்து ஏனையவற்றை

***ஆசை*** : எல்லா மனிதர்களையும், எல்லா உணர்வுகளையும் கவிதைகளாக வடித்துவிடுவது.

***இலட்சியம்*** : ஈழத்தின் வார்த்தையையும் சோகத்தையும் எவ் வடிவிலாவது அடுத்த சந்ததியினருக்கு அறிமுகப்படுத்துதல்.

***பிடித்த கவிஞர்*** : எல்லோர் எழுத்துக்கும் நான் ரசிகன். வைரமுத்துவின் வரிகளுக்கு மட்டும் நான் அடிமை.

***கவிதை பற்றி*** : அவரவர் அனுபவங்களும் உள் உணர்வுகளுந்தான் கவிதையாக மலர்கின்றன.

***முதல் முதல் ரசித்தது*** : முழுவதும் இலை பரப்பியிருந்த குளத்தில் ஒற்றையில் ஒரு தாமரை மலர்ந்திருந்த காட்சி.

***சொல்ல நினைப்பது*** : மேலே வானம், கீழே பூமி, நடுவில் கற்று - இதற்குள் நாம் யார்?

***படித்ததில் பிடித்தது:*** எனது பயணம் புனிதமானது. சாலையில் கிடக்கும் சாணங்களால் அவை அழுக்காவதில்லை. (எழுதியவர் ஞாபகமில்லை)

எந்தன் நெஞ்சில் நுளைந்துகொண்டு
துக்கம் தருகின்றாய்
என் தூக்கம் தொலைநத்து தொலைவில்
எனை
கொண்டு செல்கின்றாய்
பூக்களோடு பேசிக்கொண்டேன்
உன்னைப் பார்த்த பின்பு
காற்றோடு கவிதை சொன்னேன்
உன்னைப் பார்த்த பின்பு

இரவு வானில் கொட்டி
கிடக்கும் நட்சத்திரங்களாய்,
என் நினைவு முழுதும் நீதான்
சிதறி கிடக்கின்றாய்

வான்வெளியில் காதல் செய்யும்
நிலவும் முகிலும்,
பார் உலகில் காதல் செய்யும்
பூவும் வண்டும்
நான் மட்டும் விதிவிலக்கா?
நான் காதல் நாத்திகனா?
பார்வை மட்டும் போதாது,
புன்னகையும் சேர்த்து வீசு.
வந்த வழியே போயிருப்போம்
நானும் மனமும்
பௌர்ணமியே நீ வந்தாய் என்
குறுக்கு வழியில்
உன்னைப் போல அழகி பார்த்தால்,
என்னைபோல ரசிகன் முளைப்பான்

*தொடர்ச்சி பக்கம் 13 இல்*

**அறிமுகப் புதுமுகத்தில் அறிமுகமாக விரும்புவோர் தங்களது ஆக்கங்களுடன் அண்மையில் எடுத்த புகைப்படமொன்றை தபால்மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம்**

# இம்மாதப் பிரபலம்

## "கவிஞர் கார்த்திகேசு சிவலிங்கம்"



முழுப் பெயர் :கார்த்திகேசு சிவலிங்கம்
பிறந்த இடம் : பாலமீன்மடு
பிறந்த திகதி : 31.08.1943
கல்வித் தகைமை : சிரேஸ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்(S.S.C)
தொழிற் தகைமை : இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் 'லைசென்ஸியேற்' தரம் - (LICENTIATE of I.C.A.S.L)
தொழில் : வாழைச்சேனைக் காகித ஆலையின் கணக்காளராகக் கடமையாற்றி 60 வது வயதில் ஓய்வு பெற்றவர்.

15 வது வயதில் இருந்தே கவிதை எழுதுவதில் ஆர்வமும் ஈடுபாடும் ஏற்பட்டது. 1962ம் ஆண்டு தனது 19 வது வயதில் சிவானந்த வித்தியாலயத்தில் மாணவனாக இருந்த போது இங்கு நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 3ம் இடத்தைப் பிடித்து பரிசு பெற்றார். ஆரம்பத்தில் எழுதிய கவிதைகள் எதுவும் அவர் வசம் இல்லாதது துரதிஸ்டமே. சேவையில் இருந்து ஓய்வு பெற்றபின்புதான் கவிதைத்துறையில் முழுமையாக ஈடுபட அவகாசம் ஏற்பட்டது. இவரது கவிதைகள் தினகரன், வீரகேசரி, தினமுரசு, சுடர் ஒளி, மெட்ரோ நியூஸ், ஈழநாதம் முதலிய நாளேடுகளிலும் 'கிழக்கொளி' (கிழக்குப் பல்கலைக்கழக வெளியீடு), சுவைத்திரள், செங்கதிர், இருக்கிறம், ஜீவநதி, தேனகம் (மண்முனை வடக்குக் கலாசாரப் பேரவை வெளியீடு) முதலிய சஞ்சிகைகளிலும் அவ்வப்போது வெளிவந்தன.

அவற்றைத் தவிர களுதாவளைப் பிள்ளையார் ஆலய நிர்வாக சபையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இறுவட்டாக களுதாவளைப் பிள்ளையார் மேல் சில பக்திப் பாடல்களும் எழுதிக் கொடுத்துள்ளார். இவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பு **"முகம் காட்டும் முழு நிலா"** என்ற கவிதை நூலாக 06.04.2007 இல் மணிமேகலை பிரசுரத்தாரால் கொழும்பு தமிழ் சங்கத்திலும் 21.04.2007 இல் மட்/மகாஜனக் கல்லூரியிலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

### பெற்ற கௌரவங்கள்

- 'முகம் காட்டும் முழு நிலா' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் (21.04.2007) சிறந்த கவிஞர் என்று பாராட்டி பாலமீன்மடு ஸ்ரீ சித்தி விநாயகர் கலாமன்றத்தினராலும் காகித ஆலை முன்னாள் ஊழியர் சங்கத்தினாலும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி.த.தங்கேஸ்வரி அவர்களின் சார்பில் அவரது செயலாளர் திரு . அன்புமணி ஐயா அவர்களாலும் பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.
- கவிதைத் துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி மண்முனை வடக்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் 30.08.2008 இல் முத்தமிழ் விழாவின் போது பொன்னாடை போர்த்தியும் விருது, சான்றிதழ் என்பன வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.
- இலக்கியம், நாடகம் ஆகிய துறைகளுக்கு ஆற்றிய மிகச்சிறந்த சேவைக்கான உபகாரமாக 15.12.2009 ல் இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷணம் விருதும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- 05.08.2009 அன்று 'சடையப்பர் சுவாமிகளும் திராய்மடு திருத்தலமும் நூல் வெளியீட்டின் போது திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையினரால் பொன்னாடை போர்த்தி வாழ்த்து மடல் வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

தான் யாத்த கவிதைகளில் பிடித்த கவிதையாக "வாழ்வதா?அன்றி மாள்வதா?" கவிஞனுக்காகத் தருகிறார்.

# வாழ்வதா? அன்றி மாள்வதா?

வாழ்வதா நாம் அன்றி
வயிற்றிற்கு உணவின்றி
மாள்வதா? என்பதுதான்
மக்களது வினா இன்று

கேட்பாருமில்லை இதைக்
கண்கொண்டு பார்க்கின்ற
ஆட்களுமே தானில்லை
அழகானஇந்நாட்டில்

மாவுக்கும் விலை அரிசி
மழலை தம் உணவாம் பால்
மாவுக்கும் விலையென்றால்
மக்கள் நிலை என்னாகும்.

உடுதுணியும் பயறுமுந்து
உப உணவும் விலையென்றால்
படுதுயரம் கொண்டுசனம்
பரிதவிக்கும் நிலை காணீர்.

மசகெண்ணெய் விலையுயர
மறுபொருளின் விலையுயரும்
பிசகென்ன புரியலையே
பிழைக்க வழி தெரியலையே

இருக்கின்றோம் இங்கே நாம்
இயலாமல் நடைப்பிணமாய்
உருக்கமுடன் கிளியே நீ
உணர்த்திடு போய் அரசுக்கு

**கவிஞர்.கா.சிவலிங்கம் (கலாபூஷணம்)**

இக்கவிதை மண்முனை வடக்குப் பிரதேச செயலக கலாசார பேரவையால் 2008 ம் ஆண்டு நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவின் போது வெளியிடப்பட்ட 'தேனகம்' ஆண்டு மலரில் வெளிவந்தது.

# இலக்கணக் கவிஞன்

ஒரு கவிஞன் தன் மொழிவளம் பெருக்கிக்கொள்வது அவனது கவிதைகளின் விலாசத்தை விசாலப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றான பவணந்தி முனிவர் இயற்றிய "நன்னூல்" விளக்கவுரையுடன் இவ் இலக்கணக் கவிஞன் பகுதியினூடாக வாசகர்களுக்காக தரப்படுகின்றது.

## பிறப்பு

(பிறப்பின் பொது விதி)

**சூத்திரம் 74 (எச)**

**நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப**
**எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி**
**மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்**
**வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.**

ஒலியெழுத்தாலாகிய காரியத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி நிறைந்த உயிரினது முயற்சியால், உள்ளே நின்ற உதானன் என்னுங் காற்றானது எழுப்ப எழுகின்ற செவிப்புலனாம் அணுக்கூட்டம் மார்பும் கழுத்துந் தலையும் நாசியுமாகிய நான்கிடத்தையும் பொருத்தி உதடும் நாக்கும் பல்லும் மேல்வாயுமாகி நான்கினது முயற்சிகளால் வேறு வேறு எழுத்தாலாகிய ஓசைகளாய்த் தோன்றுதல் அவற்றின் பிறப்பாம்.

**சூத்திரம் 75 (எரு)**

**அவ்வழி,-**
**ஆவி யிடைமை யிடமிட றாகும்**
**மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.**

முன்சொன்ன வழியாற் (சூத்திரம் 74)பிறக்குமிடத்து உயிரெழுத்துக்கும் இடையினத்திற்கும் இடங் கழுத்தாகும். மெல்லினம் நாசியை இடமாகப் பொருந்தும். வல்லினம் மார்பை இடமாகப் பெறும்.

# கவிதைத் துளிகள்

## கொடுமை

மாருத மைந்தன்
மாருதி போல்
மாறி மாறி மல்டி அடிக்கிறது
மனசு
சாருதம் நீ
சாய்ந்து மொழிகையில்

## தனிமை

காடு மணம் வீச
காதோரம் காற்றுக் கூச
காரிருளில் நிலவுத்
துண்டுமட்டும்– என்
துணைக்கு வருகிறது
அதனால்தானோ நீ– தனியே
என்னை விட்டுச் சென்றாய்

செல்லத்தம்பி தாமரைச் செல்வி
(ஆரையூர்த்தாமரை)
தசபதி ஆரையம்பதி -01

## எந்தன் சுவாசம்

நித்தம் நித்தம் யுத்தம் செய்யும்
உந்தன் நினைவுகள்
எனக்குள் புத்தம் புதிதாய்
முத்தமிடும் உந்தன் கனவுகள்
மொத்தமாய் பூத்துக் குலுங்கும்
உந்தன் வார்த்தைகள்
கொத்திக் கொல்லும்
உந்தன் பார்வைகள்
கட்டிப் போடும் உந்தன் கோபங்கள்
கொட்டிக் கிடக்கம் உந்தன் பாசங்கள்
முட்டி மோதும் உந்தன் நேசங்கள்
இவையே எந்தன் சுவாசங்களாய்
என்னுள் வாசம் செய்து
கொண்டிருக்கிறது

அ.நவப்ரஷாந்த்
நாவற்குடா,
மட்டக்களப்பு.

அன்பான வாசகர்களே,

"கவிஞன்" இதழின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம். நீங்களும் இன்றே சந்தாதாரராவதோடு உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

-நன்றி-




"வார்த்தைகள் உரசும்போது
வண்ணக் கவி உருவாகும்"

## ஏமாறுபவர்கள் ஆண்களே!

*அயோத்தி மன்னன் அவஸ்தைப் பட்டது யாராலே?*
*மானென்று எண்ணியே முனிவரின் மகன் தன்னை*
*தானன்று கொன்ற சாபத்தின் பாவத்தால்*
*இராமனைப் பிரிந்து அவஸ்தையுற்றார்*
*இதிலெந்தப் பெண்ணும் ஏமாற்றம் கண்டாளா?*
*சொல் கவிஞா?*

*அழகுறுமீழம் அக்கினியானது யாராலே? அன்றும்*
*புகழ்வுறு பத்தினிப் பெண்டிரும் ஈழத்தில்*
*வாழ்ந்தனர் எனும் ஆதாரத்தில்*
*அவள் எழில் தனில் மயங்கியே "ஏமாந்த ஆண்களும்"*
*உண்டென்று அறியாமல் வடித்துவிட்டீர்*
*கவிஞரே உங்கள் பாட்டாலே!*

*தேவ தாஸனும் வீதிக்கு வந்தது யாராலே?– என்று*
*ஆண்களே ஏமாந்தர் என்றிட,*
*நீங்களே ஆதாரம் கூறிநீரே!*

**கந்தப்பெருமாள் பரமேஸ்வரி, அக்கரைப்பற்று**

---

*அடுத்த மாத இதழில் கவிதைச் சமருக்காக*
*இன்று பலராலும் விரும்பப்படுவது*
**மரபுக் கவிதையா? புதுக்கவிதையதா?**
என்று உங்கள் கருத்துக்களை கவிதையாக்கி அனுப்புங்கள்

# மாதமொரு கீதம்

**இம்மாதக்கீதம்**
மட்/உறுகாமம் சரஸ்வதி வித்தியாலயம்

**இயற்றியவர்**
திருமதி.ச.ஜெயக்குமார்

**வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே**

**வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க வாழ்க வாழ்க-வாழ்கவே**

**உலகின் முழங்கிடும் முத்தமிழ் வாழ்க
உயர்ந்திடும் நீல திருமகள் வாழ்க
உறுகாமம் சரஜ்வதி மாணவர் வாழ்க
அரும் பெரும் அன்னையும் வாழ்க
அகிலமும் ஒளிபெற தமிழ் கலை ஓங்கி
அனைவரும் சுகம் பெற வாழ்க**

**வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே**

**வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க வாழ்க வாழ்க-வாழ்கவே**

---

**மதிற்பிற்குரிய அதிபர்களே! ஆசிரியர்களே!**

இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் கீதமும் இடம்பெற விரும்பினால். உங்கள் பாடசாலை கீதத்துடன் அதை இயற்றியவர் பற்றிய சிறு விபரத்தையும், உங்கள் பாடசாலையின் மாணவரிடமிருந்து பெற்ற ஆக்கங்களையும் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எமக்கு அனுப்பிவையுங்கள். இதன்மூலம் கவிஞனின் கலாசாலைக்கீதங்கள் தொகுக்கும் மற்றும் ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தில் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

-நன்றி-

அகில இலங்கையில் பிரசித்திபெற்றதும், ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தை அடிப்படையாகக்கொண்டதும், பண்டைய சரித்திரப் புகழ்பெற்றதும் இற்றைக்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிலிருந்து வந்த நாதன் என்னும் மாமுனியால் அறிமுகம் செய்யப்பட்டதும் தஞ்சம் என்று தன்னை நாடும் அடியார்களுக்கு அஞ்சேல் என அபயமளிக்கும் ஸ்ரீபாஞ்சாலி ,ஐவராசாக்கள்,குந்திதேவி, ஸ்ரீகிருஷ்ணர் சகிதம் குடிகொண்டிருக்கும் **பாண்டிருப்பு திரௌபதை அம்மன்** ஆலய வருடாந்த மகோற்சவம் 07.09.2010 செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி **24.09.2010 வெள்ளிக்கிழமை தீப்பள்ளயத்துடனும்** 25.09.2010 சனிக்கிழமை பாற்பள்ளயம் முதலிய வைபவங்களுடனும் நிறைவுபெறும். இதனைமுன்னிட்டு வெளியாகிறது இக் கவிதை...

## பாண்டிருப்பு திரௌபதையே தாயே

**நம்பிக்கை கொண்டோர்க்கு நலந்தரும் நாயகியே உனை**
**நம்பிக் கை கூப்பி நலிந்து வணங்கு வதால் என்**
**நம்பிக்கை வளர்ந்து உள நலத்தால் நடக்கின்றேன்**
**அம்பிகையே திரௌபதையே அடியேனுன் னடி பணிந்தேன்**

**ஆண்டுகள் பலதான ஆல மரஞ் சூழ்ந்து**
**பாண்டவர் புகழ் கூறும் பழந் தலத்தே யமர்ந்து**
**பாண் டிருப்பைக் காக்கும் பலமான தெய்வம் நின் அருள்**
**வேண்டும் அடியார்கள் துன்பங்களை நீக்கிடுவாய்**

**இவளென்ன தெய்வமென இழிவுடன் பேசியவர் மனம்**
**அவமானப் பட்டோடி அலைக் கழிந்த வேளையிலே இக்**
**குவலயந்தன்னில் உன் குறும்புகளைக் கண்டோர் இதுவென்**
**தவறென் றெண்ணி உன்தாள் பணிந்த தோர் அற்புதமே**

**சுயநினை விழந்தோரும் உடல் சுகமிலா திருந்தோரும்**
**பயமுடன் வாழந்தோரும் கல்வி படித்திடா திருந்தோரும் மன**
**இயல்புடன் நீயிருக்கு மித்தலத்தே தீ மிதித்து உன்**
**தயவுடன் தலை நிமிர்ந்தித் தரணியில் வாழ்வோர் கோடி**

**இனிய இந்நாளி லுந்தன் இன்முகம்காண வந்தேன் என்னில்**
**கனிவையே காட்டி உன்மேல் கவிதையைப் பாடவைத்தாய்**
**புனித இத் தலத்தே வந்து உந்தன் புன்னகை கண் டுவந்தேன்**
**இனியெனக் கென்ன குறை பாண்டிருப்பி லிருந்தருள்பவளே தாயே**

**-கலை இளவல் தம்பிலுவில் தயா-**

# தொலைதூரப் பயணம்

தொலைந்த உறவுகளைத்தேடி
தொலைதூரம் சென்று
தொலைந்து விட்டேன் என்னுள்
நானே
தொடர்ந்து வந்த
பாதைகள் நான் கடந்து
வந்த பாதைகள் எதுவுமே
எனக்கு நினைவில்லை
உறவுகளைத் தேடுவதாய்
நினைத்து இன்று என் உலகத்தையே
தொலைத்து நிற்கிறேன்
விடியமுன் எழுந்திருக்கும் என்
அன்னை நிலா
பகலிரவின்றி உழைக்கும் என்
தந்தை நிலா
எதுவுமே இன்று எனக்கில்லை
கிடுகுகளால்
செருகப்பட்ட குடிசைகளை
வெறுத்து பளிங்கால் ஆன மாளிகைக்குள்
நுழைந்து கொண்டேன் என்
புது உறவுகளைத்தேடி
இன்று சிறுகல்
விழுந்தவுடன் கனவுகளுடன்
நொறுங்கிவிட்டது என் பளிங்கு மாளிகை
தொடர்கிறேன் பயணத்தை
உறவுகளைத் தொலைத்தவளாய்

*எச்ல்வி.லோகேஸ்வரன் நிரோஜினி*
*ஆலையடிவேம்பு வீதி,*
*சின்னக்குளம்,*
*அக்கரைப்பற்று-07*

# ஆனந்தம்

குழந்தையாய் என் இதயம்
குதூகலித்து திரிந்ததன்று
அன்னையாய் நீ வந்து
அரவணைத்த காரனத்தால்

ஆறுதல் ஆகுதம்மா
அன்பாக நீ சிரித்தால்
அன்பு மணம் வீசுதம்மா
பிஞ்சு முத்தம் தந்ததினால்

அழகான உந்தன் முகம்
ஆனந்தம் தருகுதம்மா
பூ வான பொன் மகளே ? உன்
புன்முறுவல் மாய்க்குதம்மா

பத்து தசாப்தங்கள்
பதறாமல் வாழ்ந்திடுவேன்
பத்தினியே என்னருகில்
இப்படியே இருந்து விட்டால்

அன்பு பாசம் கருணை
அகத்தினிலே உள்ளதம்மா
ஆனாலும் என்னோடு அன்புச்
சண்டை போட்டிடம்மா

ஆசையால் என்னருகில்
ஆனந்தமாய்த் தவழ்ந்து வந்து
மழலை மொழி பேசியே என்
மார்பினிலே உறங்கிடம்மா

இப்படியே என்னோடு
இனிதாக வாழ்ந்து விட்டால்
அடையுமம்மா ஆனந்தம்
ஆயுளெல்லாம் என்னிதயம்.

சி.சுதேஸ்வரன்
புதுக்குடியிருப்பு,
மட்டக்களப்பு.

# உனது தூசிப்பும் எனது நேசிப்பும்

உன்னை நான்
புகழ்கிறேன்
என்னை நீ இகழ்வதனால்

நீ தூசிக்கிறாய்
என்பதற்காக
நான் சிறிதும்
யோசிக்க மாட்டேன்

தூற்றத் தூற்றவே துள்ளி எழுகிறேன்
தூற்றுகின்ற உன்னைப்
போற்றுகிறேன்.
நீ விமர்சிக்க விமர்சிக்கவே
வீறுகொண்டெழுகிறேன்
விருட்சமாய்ப் போகிறேன்

நீ குழி தோண்டத்
தோண்டவே
ஆழமும் அகலமும் பெறுகின்றேன்
ஆல விருட்சமாய் ஆகின்றேன்.

குழியை மட்டுமல்ல
நீ எனக்கு
விழியையே தோண்டு
விழமாட்டேன் நான்

உனது பலவீனம்
எனது பலம்
நீ பலவீனப்படுத்துகிறாய்
பண்பட்டுப்போகிறேன் நான்

அதனால்தான் உன்மீது
உயிரையே வைத்திருக்கிறேன்
நான் என்றும்

இதுதான் எனது காதல்
இதுதான் எனது பைத்தியம்.

ஓ.... சமூதாயமே
உன்னை நான்
பண்படுத்தி விட்டுத்தான்
பாடையில் ஏறுவேன்

கன்னிமுத்து வெல்லபதியான்
(சரவணமுத்து நவேந்திரன்)
170/B சோமநாதர் வீதி,
பாண்டிருப்பு -01
கல்முனை.

புரட்டாதி -08 உலக எழுத்தறிவு தினம்.
<u>பொய்யா மொழிகூறும் எழுத்தறிவு.</u>

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

(அதிகாரம் 40(கல்வி), குறள் 02)

*எண் என்று சொல்லப்படுவனவும் எழுத்தென்று சொல்லப்படுவனவும் ஆகிய இவ்விரண்டு பொருளும் உலகில் வாழும் உயிர்களுக்கு கண் என்று சொல்லுவர்.*

*3 ம் பக்க அறிமுகப் புதுமுகம்*

**தர்மகீர்த்தி தனுஷன்** *அவர்களின்*

*கவிதையின் தொடர்ச்சி.........*

வாழ்த்த மட்டும் நானில்லை
வாழ்வு முழுதும் கூடவருவேன்.

வருவாயா மாட்டாயா
கண்களால் கேட்பேன்
புரிந்தும் புரியாதவள் போல்
மௌனமாய் பேசினாய்
வெட்கத்தை விட்டு கேட்டேன்
என் அணைப்பில் - ஒரு தரம்.
வந்துவிட்டு சென்றுவிடு
சொன்னதும் விழுந்தாய்
தோள்மேல் மாலையாய்
கண்களால் கேட்டாய்
"இதற்குத்தானா ஆசைப்பட்டாய்
அதில் - முத்தம் வைத்து
பதில் சொன்னேன்
உணர்வுகளால் விளங்கிக்கொண்டாய்

**தர்மகீர்த்தி தனுஷன்**
**12ம் குறுக்கு,**
**திருப்பெருந்துறை,**
**மட்டக்களப்பு.**

# ஆதியனாகிவிடு!

சாதி மதம் களவு கொள்ளை
தொழில் தொடர்பு பசி பொறாமை
சொற்களில்லா அகராதி ஒன்று
சொர்க்கம் போல் மண்ணில் இங்கு
சொப்பனமாய் நிலைத்திருக்கும்
பச்சையம் கொண்டு – தன்
இச்சையாய் மனிதன்
உணவு பெற்றிருந்தால்

போதியதாய் உணவு கொண்டு
மீதியதை தன்னில் கொண்டு
பூமியதில் புதைந்து கொண்டு
புல்லினம் போல் நின்றிருந்தால்
மீறியொரு உயர்குலத்தால்
பாவம் அவன் சிறைப்படுவான்

இயற்கையதன் துயிலுரித்து
ஒயிலை நீ ஒடித்தெறிந்து
வாழ்தலில் சாதல் நன்று
நீ சாதலில் காதல் கொண்டு
இன்றே மாய்ந்திடு – அன்றேல்
உன்னுள் உறங்கிடும் அஃறிணை
உயிரினத்தை நன்றே மாய்த்திடு

இப்படியே இருந்துவிடு – உன்
தப்புகளைத் தள்ளிவிட்டு
தர்க்கங்களை தகர்த்தெறிந்து
தரணியை நீ தரப்படுத்த
இப்படியே இருந்துவிடு – அந்த
ஆதியன் போல் இக்கணமே மாறிவிடு

**கவிஞன்**

# அட்டைப்படக் கவிதை

இந்த மாத அட்டைப் படத்தினை கவிஞனுக்காக வரைந்தனுப்பியவர்

செல்வி.இரத்தினசிங்கம் கிருஸ்ணா,
127/21 வர்ணகுலசிங்கம் வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.

**மனமறியா மலரே!**
**உனக்கு**
**இனமழிந்த தூக்கமா?**
**வானம் தெரியா வாரிசே!**
**உனக்கு**
**பிணம் தெரிந்த ஏக்கமா?**

**இ.சபா**
**செட்டிபாளையம்**
**மட்டக்களப்பு**

**மனிதம் இல்லாத மண்ணில்**
**மனிதனாக வாழ்வதை விட**
**மர அணிலைப்போல்**
**மரத்தில் வாழ்வது நிம்மதி**

**ஒ.கௌசிகா**
**தரம்-11**
**தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயம்**
**தம்பிலுவில்**

**தன்மானமிழந்து**
**உடல்மானம் காத்து**
**வாழ்கின்றார் பலர் - நானோ**
**உடல்மானம் விற்று**
**தன்மானம் வாங்கப் போகின்றேன்**

**நிவேதிதன்**
**அக்கரைப்பற்று**

---



அடுத்த மாதம் அட்டைப்படமாகவுள்ள இப் படத்தைப் பிரதிபலிக்கும் உங்கள் எண்ணங்களை கவிதையாக்கி எமக்கு எழுதியனுப்புங்கள்

## அகத்தில் அமர்ந்தவை

# இலக்கியம் இயம்பும் சினிமா

சங்க காலம் (கி.மு-கி.பி 3ம் நூற்றாண்டு) தனித்துவமான செய்யுட்கள் உருவான காலம் இக்கால இலக்கியங்களை "பதினெண் மேற்கணக்கு" நூல்கள் எனவும் கூறுவர் இதை எட்டுத் தொகை பத்துப் பாட்டு எனப் பிரித்தனர்.

எட்டுத் தொகை நூல்களில் ஒன்றே குறுந்தொகை. அதில் 400 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 40 வது பாடலில் காதலன் காதலி இருவரினதும் தூய அன்பு கூறப்பட்டுள்ளது. அவர்களது காதல் இரண்டறக் கலந்து விட்டது. ஒருவரிலிருந்து மற்றவரைப் பிரிக்க முடியாதவாறு பிணைப்பு ஏற்பட்டு விட்டது. இதனை விளக்கவே உள்ளுறை உவமையைப் புலவர் கையாண்டார்.

குறிஞ்சி நிறச் சிவந்த மண்ணில் (கிறவல்) மழை பெய்தால் நிலத்தின் நிறம் வேறாகவும் மழைநீரின் நிறம் வேறாகவும் தெரிவதில்லை. இதே போன்றே இருவரது அன்பும் பிரிக்கமுடியாதுள்ளது.

நூல் : குறுந்தொகை
பாடல் : 40
பாடியவர் : செம்புலம் பெயல் நீரார்
வரிகள் : 'செம்புலம் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே"

இதே வரியை இன்றைய சினிமாப் பாடல்கள் சுமார் 2000 வருடங்கள் கடந்த பின்பும் அதற்கு உயிர்கொடுத்து வாழ வைத்துள்ளன.

படம் : இருவர்
இயற்றியவர் : கவிப்பேரரசு வைரமுத்து
பாடல் : நறுமுகையே... நறுமுகையே...

**<u>வரிகள்</u>**

நறுமுகையே... நறுமுகையே...
நீயொரு நாளிகை நில்லாய்
செங்கனியூறிய வாய்திறந்து.

நீயொரு திருமொழி சொல்லாய்....

............................

**செம்புலம் சேர்ந்த நீர்த்துளிபோல்**

**அன்புடை நெஞ்சம் கலந்ததென்ன**

*வி.கிருத்திகா*
*கிராமசபை வீதி, தம்பிலுவில்-2*

# மேசைக் கிறுக்கல்கள்



இப்பகுதி ஒரு வித்தியாசமானதாக அமையலாம். இதற்காக நாங்கள் கவிஞர்கள் உருவாக்கப்படும் ஆரம்ப இடமாகிய வகுப்பறை மேசை~களை நாடவேண்டியிருந்தது. அங்கு பெற்றுக்கொண்ட சில கிறுக்கல்களே இவை. சில மிகவும் உணர்வுபூர்வமானவை. முகம்தெரியா கவிஞர்களின் முத்துச் செதுக்கல்கள் சில..........

உண்மைகள்
ஊமையாகும்போது-உன்
எண்ணங்கள் ஊமையாகிறது
பின் என்னை நீ
பின்னலாக்கிறாய்

காத்திருப்பு
அருமையானதென்று
காதலுக்குப்பின்தான்
புரிகிறது.

அப்போது
முடிவாய் நீ
காதலை - இப்போது
முடிகிறது தாடி
உன் முகம்
முழுவதும்

உனக்குமுன்
நான் வந்தால்
என் விழிகள்
வகுப்பறை வாசலில்
தவம் கிடக்கிறது-உன்
வருகையை எதிர்பார்த்து

# நிறைமகள்

-வேதமூர்த்தி-

மணிக்கணக்காக
மகிழ்ந்தாள் கண்ணகி
இன்பத்தின் இரகசியங்கள்
இனங்காணப்பட்டன.
இல்லற வாழ்க்கையில்
இரண்டு சக்கரங்களும்
ஒன்றையொன்று முந்தாமல்,முடங்காமல்
ஒழுங்காக உருண்டோடின.
ஆண்டுகள் சில கடந்தது
அமர வாழ்க்கையில்.
வேண்டுவோர் வேண்டும்
பொருளீய வேளை தவறாது
விருந்தும் விளைய
நாளும் பொழுதும்
நயமாக உருண்டது.
கண்ணகி கோவலன்
களிப்புக்குக் கரையிருக்கவில்லை
ஆகாயமாக
அன்பு விரிந்தது.
மணாளன் மாண்புக்கு
மங்கையர் திலகம்
கண்ணகி மடைதிறந்தாள்.
வசந்தத்தின் வாசற்கதவுகள்
திறந்து வழிவிட
கோவலன் தொங்கல் தேடி
தொடர்ந்தான்.

(தொடரும்...)



# வாசகரிடமிருந்து கவிஞனுக்கு

*அன்புடையீர்,*

*கவிஞன் சஞ்சிகையின் 06 வது இதழ் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. அறிமுகப் புதுமுகம் இளங் கவிஞர்களை ஊக்குவிக்கும் முகமாக அமைக்கப்பட்ட ஒரு களமாக அமைந்துள்ளது.*

*த.யுவராசா என்ற மாணவன் எழுதிய முதற்பரிசு பெற்ற கவிதையைப்படித்தேன். அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.*

*எஸ்.இராகுலன் எழுதிய விடியலை நோக்கி என்ற தலைப்பிலான கவிதை ஓரளவு நல்லது இடைக்கிடை முறிவுகள் தென்படுகின்றன. முயற்சிக்கு வாழ்த்துக்கள். இருப்பினும் கவிஞனுக்கு சில வேண்டுகோள்கள்...*

*அட்டைப்படக் கவிதைக்காகத் தரப்படும் அட்டைப்படங்கள் சிறியதாகவும் தெளிவில்லாமலும் இருக்கின்றன. அதனால் படத்தை விளங்கிக் கொள்ள முடியாமலிருக்கிறது. படங்கள் பெரியதாகவும் துலக்கமாகவும் இருந்தால் நல்லது.*

*06 வது இதழில் சந்தா விபரம் தரப்படவில்லை ஒவ்வொரு இதழிலும் தரப்பட்டால் வாசகர்கள் சந்தாவைச் செலுத்த உதவியாக இருக்கும்.*

*தங்கு தடையின்றிக் கவிஞன் வெளிவர எனது வாழ்த்துக்கள்*


***கவிஞர். சிவலிங்கம்***
***மட்டக்களப்பு.***

---

**சென்ற மாத கவிஞனில் பக்கம் 2 இல் ஆவணி என்பதற்குப் பதிலாக தவறுதலாக ஆனி என அச்சிடப்பட்டிருந்தது. என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.**

---

## கவிதை நூல் அறிமுகம்




**நூல்** : **முகம் காட்டும் முழுநிலா**
**ஆசிரியர்** : **கார்த்திகேசு சிவலிங்கம்**
**முகவரி** : **இல:06,**
**ஈஸ்வரன் ஒழுங்கை,**
**மட்டக்களப்பு**
**வெளியீடு** : **மணிமேகலைப் பிரசுரம்.**
**முதற் பதிப்பு** : **2006**
**விலை** : **ரூ.100.00**

## விரைவில் இலண்டனில் ஈழத்து தமிழ் நூற் கண்காட்சி – 2010

ஈழத்து,புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து வடிவங்கள் காட்சியில் இடம்பெறும். அரசியல், அழகியல், ஆன்மீகம், இதிகாசம், இசையியல், சமயம், வரலாறு, ஓவியம், ஓலைச்சுவடிகள்,நாவல், நாடகம், சிறுகதை, சிறுவர் இலக்கியம், கவிதை, திரைப்படப்பிரதி, தொல்லியல், நூலகவியல், போராட்டப்பதிவுகள், சிறுசஞ்சிகை, விவசாயம், புவியியல், சோதிடம், மொழிபெயர்ப்பு. என விரியும் ஈழத்து நூல்களின் கண்காட்சி.

உங்கள் படைப்புகளுடன் படித்து முடித்த நூல்களும் ஈழத்து எழுத்தாளர்களின் ஒலி, ஒளி இழை நாடாக்களும் அனுப்பலாம். அனைத்து எழுத்தாளர்களின் பழைய புதிய படைப்புக்களையும் அமரத்துவமான படைப்பாளிகளின் புகைப்படம் உள்ளிட்ட தகவல்களையும் அனுப்புங்கள்.

இந்தக் கண்காட்சிக்கு தங்களால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகட்கு:-

R.MAHENDRAN (முல்லை அமுதன்),
34 RED RIFFE ROAD,
PLAISTOW,
LONDON,
E13 OJX.

Tel: 0208 5867783
Email: mullaiamuthan_03@hotmail.co.uk

---

நகரும் நாட்களின் தொடரும் விடிவிற்காய் உங்கள் மனப்பதிவுகளை கவிஞன் எனும் காலக்கண்ணாடியில் தரவேற்றம் செய்து, உங்கள் ஆக்கங்களையும் காலத்தின் தேவையையும் கலையினூடு பகிர்ந்து கொள்ளுங்கள்

உங்கள் ஆக்கங்களை கீழுள்ள முகவரிக்கு அனுப்பி காலக்கண்ணாடியின் கோலப்புத்தகத்தில் நீங்களும் புள்ளி வையுங்கள்!!!

**அனைத்துத் தொடர்புகளுக்கும்:**

தபால் முகவரி "கவிஞன்"
கூட்டுறவுக் கடை வீதி.
புதுக்குடியிருப்பு - 5 (கீ.மா).
மட்டக்களப்பு.
இலங்கை.

மின்னஞ்சல் kavignan@live.com

தொலைபேசி இல 0773620328

அனைத்து ஆக்கங்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்புடையவர்